# மலேசியாவில் விடுதலைக்கு முந்திய இந்து மத அமைப்புகள்

## Hindu Religious Movements in Pre-Independent Malaysia

முனைவர்சு.மணிமாறன் / Dr.S.Manimaran[1]

***Abstract***

The Hindu Religious Movement in Malaysia has been a major contributor to the development of Hinduism by nurturing and protecting the Hindu religion. The purpose of this article is to explain how Hindu religious movements evolved before indipendence and how its formation contributed to the growth of Hinduism and the religious awareness of the Hindus. This article is about to describe the historical evidence for the appearance of Hinduism in Malaya, what is the contribution of Hindus background in continuous growth of Indian movements, how were the connections made among the religious movements in India and religious Movements in Malaysia, how the educated Hindus started these religious movements and the period in which they started. This article also discusses how the Hindu Religions created a new look after the Japanese period and the major religious movements that participated in it. This article is based on a qualitative review protocol and defined in the view of religious sociology. This article has been written based on the research library examining only the Hindu movements recorded during the Malay rule. This article will not only look at the history of Hindu religious movements that appeared before the indipendence of Malaya but also the purposes for which they were created. This article also explains what the conditions were like for these developments and what implications they had.

Date of submission: 2019-05-10
Date of acceptance: 2019-07-10
Date of Publication: 2019-12-31
Corresponding author's Name: Dr.S.Manimaran
Email: manimaran23@um.edu.my

**Key Words:** Hindu organisation, Hindu movement, Hinduism, Temple worship, History

### முன்னுரை

மலேசியாவில் இந்து சமயம் வேரூன்றி இருப்பதற்கு இந்து ஆலயங்களும் இந்து சமய இயக்கங்களும் பெரும் பங்காற்றியிருக்கின்றன. இந்து சமயம் மலேசியாவில் வேரூன்றுவதற்கு நீண்ட ஒரு வரலாறு உள்ளது. இதில் குறிப்பாக ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சி மலேசியாவில் இந்து சமயம் நிலைபெறுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. மலாயாவில் ஆங்கிலேய ஆட்சிக் காலகட்டத்தில் புலம் பெயர்ந்த இந்தியர்களுக்கு சமய வழிப்பாட்டிற்காக ஆலயங்கள் உருவாக்கப்பட்டன. அதே காலக்கட்டத்தில் இந்துக்கள் சுதந்திரமாகத் தங்களின் சமய நெறியைப் பேணிக்காக்க சமய அமைப்புக்கள் உருவெடுப்பதற்கு இவ்வாலயங்கள் வழிவகுத்தன. இவ்வாறாகத்

[1] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

தோன்றிய சமய அமைப்புகள் பின்னாளில் இந்து சமயம் இந்நாட்டில் நிலைப்பெறுவதில் மிக முக்கியப் பங்காற்றியுள்ளன. அந்த வகையில் விடுதலைக்கு முன் தோன்றிய சமய இயக்கங்களின் வரலாற்றினையும் அதன் தாக்கத்தையும் இக்கட்டுரை ஆராய்ந்து விளக்கப்படுத்துகின்றது.

## கட்டுரையின் நோக்கம்

விடுதலைக்கு முன், மலேசியாவில் இந்து சமய இயக்கங்களின் தோற்ற வளர்ச்சியினைக் கண்டறிந்து அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் மாற்றங்களையும் விவரிப்பதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆய்வு நெறி

இவ்வாய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு(qualitative) நெறியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமயம், சமூகவியல், பண்பாடு, உளவியல் சார்ந்த துறைகளை ஆய்வு செய்வதற்கு இந்நெறி ஏற்புடையதாகும் (Sabitha Marican, 2005, p.12). தரப்பகுப்பாய்வு ஆய்வுமுறையானது விளக்கமுறைக்கு (interpretation) ஏதுவாகின்றது. விளக்கமுறையின் வழி, சேகரிக்கப்படும் தரவுகள் யாவும் சூழல், கருப்பொருள், நோக்கம் ஆகிய முக்கூறுகளின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது.

இந்த தரப்பகுப்பாய்வு நான்கு பின்பற்ற பட்டுள்ளது (Neuman, 2000, p.122). அவை பின்வருமாறு அமைகின்றன. ஆராய்ச்சி ஆவணங்களை அடையாளம் காணல் (identification and documentation), தரவுகளை ஆராய்ந்து பகுத்தாய்தல் (investigation and compartmentalization), செயல்முறை விளக்கத்துடன் பகுத்தாய்தல் (interpretation and analysis), தரவுகளை ஒருங்கிணைத்து ஆய்வின் முடிவுகளைக் காணல் (integration and conclusion). மேற்கண்ட அணுகுமுறையின் கீழ் தரவுகளை சேகரித்து கட்டுரை எழுதப்பட்டது.

## மலாயாவில் ஆரம்பகால இந்து சமய பின்புலம்

இந்தியாவிற்கும் மலாயாவிற்கும் இடையேயான தொடர்பானது கிறிஸ்துவத்திற்கு முன்பே தொடங்கியதாகப் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (Coedes, 1968, p. 8, &19-27; Bosch, 1961, p.12-14) இத்தொடர்பின் வழி தென்கிழக்காசியாவில் இந்தியமயம் (Indianisation) ஏற்பட்டு பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் விதைக்கப்பட்டன. (Van Leur, 1955, p. 23; Basham, 2002, p. 226-230; Subramanian, 1966). இத்தொடர்பானது பின்பு தென்கிழக்காசியாவில் இந்து சமயம் மற்றும் பௌத்த சமயம் வேரூன்றுவதற்கு வழிகோலியிருப்பதாகச் சான்றுகள் பறைசாற்றுகின்றன. (Rajantheran, 1999, p.16-73).

இவ்வாறு பல்வேறு தொடக்கக்காலத் தொடர்புகள் இருந்தாலும் கூட மலேசிய இந்துக்களின் சமய வரலாற்றுக்கு அவை நேரடித் தொடர்புடையதாக அமையவில்லை. இருப்பினும், மலாக்கா மன்னர் ஆட்சியின்பொழுது மலாக்கா செட்டிகள் இந்து சமயத்தை மலாயாவில் பின்பற்றியதிற்கான சான்றுகள் மற்றும் ஆராய்ச்சி குறிப்புகள் கிடைக்கப்பெறுகின்றன. (Singaravelu, 1989, p. 31-32). இதனைதொடர்ந்து போர்த்துகீசிய மற்றும் டச்சுக்காரர்களின் ஆட்சியின்பொழுது இந்து சமயம் மலாயாவில் இருந்ததற்கான சான்றுகள் இருந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (Ravichandran Moorthy, 2009, p. 6, Sandhu, 2010, p. 28-29, Sandhu, 2010, p. 27; Vineeta Sinha, 2011, p. 29). ஆனால் மலேசிய இந்துக்களின் சமய வளர்ச்சி என்பது ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியிலிருந்துதான் தொடங்குகின்றது.

## ஆங்கிலேய ஆட்சியின்பொழுது மலாயாவின் இந்து சமய பின்புலம்

ஆங்கிலேய ஆட்சி என்பது 1786 தொடங்கி 1957 வரை இருந்த காலக் கட்டமாகும். கிழக்கிந்திய கம்பெனியின் வழி மலாயாவின்

ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் பினாங்கு மாநிலத்தில் 1786ல் சர் பிரான்சிஸ் லைட் வாணிகம் தொடங்கியதிலிருந்து தொடங்குகிறது. (Sandhu, 2010, p. 118, 177). இதுபோல் சிங்கையில் 1819ல் சர் ஸ்டாம்போர்ட் ராஃபிள்ஸ் ஜொகூர் சுல்தானோடு ஒப்பந்தம் செய்துகொண்டு அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து சிங்கையில் இந்துக்கள் குடியேறியதற்கான சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன. இதனைத் தொடர்ந்து 1824இல் பிரிடிஷ் ஆங்கிலோ டச் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மலாக்கா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வரத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியானது மலாயாவின் பிற மாநிலங்களில் மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தங்களின் தேவையைப் பூர்த்திச் செய்யும் பொருட்டும் மலாயாவின் வளர்ச்சிக்கு வித்திடவும் ஆள்பலம் தேவைப்பட்டதால் தென் இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து இந்தியர்களை மலையகத்திற்கு வேலை செய்வதற்காக அழைத்து வந்தனர். இதில் பெரும்பாலும் தென் இந்தியாவைக் குறிப்பாகத் தமிழ் நாட்டைச் சார்ந்த தமிழர்களை அழைத்து வந்தனர். அவாறு வந்த இந்திய இலங்கை சார்ந்தவர்கள் பெரும்பகுதியினர் இந்து சமயத்தைப் பின்புலமாகக் கொண்டிருந்தனர். (Sandhu, 1969, p. 233; Carlo Caldarola, 1982, p. 457)

மலாயாவிற்கு வந்த இந்துக்கள் தங்களுடைய சமயத்தைப் பின்பற்றுவதற்கு ஏதுவாக இந்து ஆலயங்கள் பிரிட்டிஷாரால் அமைத்துத் தரப்பட்டன. இவ்வாலயங்களின் வழி இந்துக்கள் தங்களுடைய சமய விழாக்களையும் பூசைகளையும் மேற்கொண்டனர். தொடக்கக் காலகட்டத்தில் இந்து சமய வளர்ச்சிக்கு ஆலயங்கள் பெரும்பங்காற்றின என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (Arasaratnam, 1970, p.165-174: Carlo Caldarola, 1982, p. 466; Clothey, 2006, p.7) இவ்வாலயங்கள், பல்வேறு சமய இயக்கங்கள் இங்கு தோன்றி இந்து சமயத்தைப் பேணிகாப்பதில் பெரும் பங்காற்றி உள்ளன. இவ்வாறு தோன்றிய சமய இயக்கங்கள் இந்திய மற்றும் இலங்கை மண்ணின் தாக்கத்தை உடையனவாகவும் மலாயாவின் இந்துக்களின் தேவைக்கு ஏற்ப உருவெடுத்தனவாகவும் அமைகின்றன.

## மலாயாவில் இந்து சமய இயக்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆங்கிலேய ஆட்சியின் பொழுது மலாயாவில் வாழ்ந்த இந்துக்களைத் தோட்டப் புறங்களில் வாழ்ந்த இந்துக்கள் மற்றும் பட்டணப்புறங்களில் வாழ்ந்த இந்துக்கள் என இரு பிரிவுகளாகப் பகுக்கலாம். தோட்டப் புறங்களில் வாழ்ந்த இந்துக்கள் தங்களுடைய சமய நெறியை ஆலய வழிபாட்டிலும் சிறு தெய்வ குல தெய்வ வழிப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொண்டனர். இவர்களில் பெரும்பகுதியினர் படிப்பறிவு குறைந்த தோட்டப் பாட்டளி மக்களாகவே இருந்தனர். (Rajoo, 1975, p. 211-215, 247-249). இவர்களின் சமய அறிவும் கல்வி அறிவும் குறைவாகவே இருந்தன. ஆனால் பட்டணப்புறத்தில் வாழ்ந்த இன்னொரு பிரிவினர் ஓரளவு கல்வி அறிவு பெற்றவர்களாகவும் சமய அறிவு பெற்றவர்களாகவும் இருந்தனர். இவர்களுள் இலங்கை தமிழர்களும் செட்டியார் சமூகத்தினரும் மற்றும் கல்வி கற்ற இந்தியர்களும் பெரும்பாலும் பட்டணப்புறங்களில் வாழ்ந்தனர். இவர்களின் சமய அறிவும் கல்வி அறிவும் இந்து சமய அமைப்புக்கள் மலாயாவில் தொடங்குவதற்கு வித்திட்டன. (Arasaratnam, 1970, p. 162-163; Ampalavanar, 1972, p. 225).

கல்வி அறிவுடன் சமய அறிவும் பெற்று வாழ்ந்த மலாயா இந்துக்களிடையே சமய மறுமலர்ச்சி சிந்தனை உருவாகுவதற்கு இந்திய மண்ணில் நடந்த சமய சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக அமையப் பெற்றன. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய மண்ணில் பல்வேறு சமயச் சீர்திருத்தங்கள் நடைப்பெற்றன. (Natarajan, 1959, பக்கம் 39). குறிப்பாகக் கல்வி அறிவு பெற்ற அறிஞர் பெருமக்கள் சமய அறிவை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றினர். (Rajoo, 1985, p.

155). இதில் ராஜாராம் மோகன் ரோய் (1828), தேவேந்திரநாத் தாகூர் (1829), சுவாமி சிவதயால் மற்றும் ராய் சலிங்கரம் (1861), சிவ் நரேன் அக்னிஹோத்ரி (1887) , தயானந்த சரஸ்வதி (1875), சுவாமி விவேகானந்தர் (1897) மற்றும் பலர் மூலமாக உருவாக்கப்பட்ட சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் இந்திய மண்ணில் மட்டுமில்லாமல் மலாயாவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.( Natarajan,1959, p.6-10, 39 - 40) அதன் விளைவாக மலாயாவிலும் இந்து சமயத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு பல்வேறு இந்து சமய இயக்கங்கள் தொடங்கப்பட்டன.(Steven Vertove, 2000, p. 31;Carlo Caldarola, 1982, p. 37)

மேற்கண்டவாறு பல்வேறு இந்து சமய இயக்கங்களின் சமயத் தலைவர்கள் இந்திய மண்ணில் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டாலும் அதில் ஒரு சிலருடைய தாக்கம் மலாயாவில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக சுவாமி விவேகானந்தருடைய தாக்கம் மிகப் பெரியதாக இருந்தது. 1893 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் உள்ள சிகாகோவிற்கு சென்றதும் அந்நாட்டில் உள்ளவர்களுக்கு இந்து சமயத்தின் மேன்மையை விளக்கியதும், உலக இந்துக்களிடையே இந்து சமய விழிப்புணர்வையும் மதப் பற்றையும் அதிகரித்தது. அதே ஆண்டில் (12 ஜூன் 1893) சர்வதேச மத மாநாட்டிற்காக அவர் செல்லும் வழியில் சிங்கப்பூருக்கு வந்து அங்கே உள்ள மலாயா இந்துக்களிடையே உரையாற்றியது இங்கிருந்த இந்துக்களிடையே சமய விழிப்புணர்வை தீவிரப்படுத்தியது. குறிப்பாக ஆங்கிலம் படித்த இந்துக்களிடையே இத்தாக்கம் அதிகமாகத் தென்பட்டது. (Rajakrishnan, 1988, p. 128).

சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கப் பயணத்திற்குப் பிறகு இந்திய மண்ணில் மேற்கொண்ட பல்வேறு சமூகச் சமயப் பணிகள் இந்தியாவில் மாபெரும் சமய சீர்த்திருத்தத்திற்கு வித்திட்டன. அதே காலக் கட்டத்தில் இப்பணிகள் மலாயாவில் வாழ்ந்த இந்துக்களிடையேயும் சமய மறுமலர்ச்சிக்கும் இந்து சகோதரத்துவத்துக்கும் வித்திட்டன. (Rajakrishnan, 1988, p. 128). சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளும் சீர்திருத்தக் கருத்துகளும் மலாயா இந்துக்களின் சமய உணர்வை உரம் பெறச் செய்தன. சுவாமி விவேகானந்தரின் வேதாந்தக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட சமய குருமார்கள் சிங்கப்பூரிலும் மலாயாவிலும் தங்களுடைய வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பினர். அதன் விளைவாக மலாயாவில் வாழ்ந்த இந்துக்கள் குறிப்பாக ஆங்கிலம் படித்த இலங்கைத் தமிழர்கள் இங்கே விவேகானந்தா ஆசிரமத்தை 1904ல் தொடங்கினர். (Ibid, p.129)

விவேகானந்தர் ஆசிரம இயக்கம், வேதாந்த தத்துவம் மற்றும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் (சுவாமி விவேகானந்தரின் குரு) போதனைகளை மலாயாவில் உள்ள இந்துக்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களிடையே பரப்புவதற்காக நிறுவப்பட்டது. விவேகானந்தர் ஆசிரம இயக்கம் வேதாந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் மலாயாவில், சைவ சித்தாந்தத் தத்துவத்தையும் வளர்ப்பதில் பங்காற்றியது. (Rajakrishnan, 1988, p.128-130). சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தப்பட்டதற்குக் காரணம் இராமகிருஷ்ணா ஆசிரம இயக்கத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர் மற்றும் தமிழகத்தைச் சார்ந்த சைவ சமயத்தை ப்பின்பற்றும் மக்களாக இருந்தனர்.

விவேகானந்தர் ஆசிரம இயக்கம், சமய மேம்பாட்டு நடவடிக்கை மட்டுமில்லாமல் சமூக மற்றும் கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. அதன் விளைவாக 1906 ஆம் ஆண்டு தம்புசாமிப் பிள்ளை தமிழ் பள்ளி செந்தூல், கோலாலம்பூரில் தொடங்கப்பட்டது. இதனை அடுத்து 1914 இல் பிரிக்பீல்ட்ஸ் கோலாலம்பூரில் விவேகானந்தா தமிழ்ப் பள்ளி வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டது. (Rajakrishnan, 1988, p. 129). சுவாமி விவேகானந்தரின் சிங்கப்பூர் வருகை 1928 இல் சிங்கப்பூரில் இராமகிருஷ்ணா இயக்கம் எனும் இந்து சமய அமைப்பை நிறுவுவதற்கு வழிவகுத்தது. (Vineeta Sinha, 2011, p. 217). இந்த அமைப்பு 1896 இல் வட

இந்தியாவில் நிறுவப்பட்ட இராமகிருஷ்ணா மிஷன் அமைப்பின் கிளை அமைப்பாகச் செயல்பட்டது. சிங்கப்பூரில் நிறுவப்பட்ட இராமகிருஷ்ணா மிஷன் பின்னர் மலாயாவில் உள்ள பிற மாநிலங்களிலும் அதன் கிளை மையங்கள் உருவாவதற்கு வழிவகுத்தன. இதில் குறிப்பாக 1938 இல் பினாங்கில் இராமகிருஷ்ணா ஆசிரமம் (ஆதரவற்றோர் இல்லம்) தொடங்கப்பட்டது. சிங்கப்பூரில் இராமகிருஷ்ணா ஆசிரமத்தில் பணியாற்றி வந்த சுவாமி பாஸ்வரானந்தாவின் முயற்சியால் இந்த அமைப்பு நிறுவப்பட்டது.

சுவாமி விவேகானந்தரின் சிங்கப்பூர் வருகைக்கு முன்பே, 1900 ஆம் ஆண்டு மலாயாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள், சிலாங்கூர் சிலோனீஸ் காங்கிரஸ் அமைப்பை நிறுவியிருந்தனர். இந்த அமைப்பு பின்னர் சிலாங்கூர் இலங்கைத் தமிழர் சைவ அமைப்பு என்று பெயர் மாற்றம் செய்ய முன்மொழியப்பட்டது. சைவ மதத்தின் மீதுள்ள பற்றால் இப்பெயர் மாற்றம் முன்மொழியப்பட்டது. பெரும்பாலான தமிழ் சிலோன் சமூகம் இந்து சைவ மதத்தின் மீது பற்றுள்ளவர்களாக இருந்தனர். இந்த பெயர்மாற்ற முயற்சி பின் கைவிடப்பட்டது. ஏனெனில் கிறிஸ்தவர்களாக இருந்த சில இலங்கைத் தமிழர்கள் அந்த அமைப்பிலிருந்து தாங்கள் விலக்கப்படுவதை விரும்பவில்லை. (Rajakrishnan, 1988, p. 129).

இருப்பினும், இந்த அமைப்பின் முக்கிய செயல்பாடு மதம் சார்ந்வையாக இருந்ததாகக் கூறப்படுகிறது. 1930 ஆம் ஆண்டு, இலங்கைத் தமிழ் மக்களுக்காக ஓர் அமைப்பை நிறுவ விருப்பப்பட்டனர். காரணம் அந்த ஆண்டுகளில் இந்து கோவில்கள் உட்பட இலங்கை இந்து மக்கள் கோவில்களும் பல சிக்கல்களை எதிர்கொண்டிருந்தன. இச்சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவும் மத அமைப்புகளை நிறுவுவதற்கு அவர்கள் விருப்பப்பட்டனர். 1949 ஆம் ஆண்டில் அவர்கள் மலேசிய சிலோன் சைவ அமைப்பு என்ற பெயரில் தங்கள் அமைப்பை அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்தனர். (Ibid., P.146-150; Alexandra Kent, 2007, p. 330-31).

இது மட்டுமல்லாமல் மற்ற பல்வேறு சமய இயக்கங்களும் உருவெடுத்தன. 1918 ஆண்டில் தைப்பிங்கில் இந்து இளைஞர் இயக்கம் தொடங்கியது. இந்த அமைப்பு டாக்டர். ஏ. விஸ்வலிங்கம் அவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலாயாவில் உள்ள இந்திய இந்துக்களின் நட்பைப் பெறுவதற்கும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதற்கும் சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும் அமைந்தது. (Alexandra Kent, p 126-128). பின்னர் 1923 இல் டாக்டர். ஏ.விஸ்வலிங்கம் கோலாலம்பூரில் சைவ சித்தாந்த சங்கம் என்ற மற்றொரு அமைப்பை அமைத்தார். இந்த சைவ சித்தாந்த சங்கத்தின் வழி சைவ சமய போதனைகளையும் அதன் சித்தாந்த தத்துவத்தையும் மலாயா இந்தியர்களிடையே ஊக்குவிப்பதில் இம்மன்றம் தீவிரமாகச் செயல்பட்டது (Mani, 2008, p. 66-68).

பல்வேறு இந்து மத அமைப்புகள் 1910ஆம் மற்றும் 1920ஆம் ஆண்டுகளில் மலாயாவில் தோற்றம் கண்டன. (Arasaratnam, 1970, p.165-166) ஆனால் இந்த அமைப்புகள் அனைத்தும் தேசிய அளவில் செல்வாக்கு மிக்க அமைப்புகளாக உருவாகவில்லை. இவ்வாறாக உருவான அமைப்புகள் மலாயாவில் உள்ள இந்திய சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கும் வட்டாரத்துக்கும் மட்டுமே செயல்பட்டன. அவற்றில் 1915இல் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்து சமய ஆலோசனை மன்றம் குறிப்பிடத்தக்கது. இக்காலக்கட்டத்தில் மலாயாவில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சமய மன்றங்கள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. (Edward Quinn, 2009, p. 415). அக்காலக்கட்டதில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்து சமய மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்து சமய மன்றங்கள் எதுவும் இருந்ததாக அடையாளம் காண முடியவில்லை. (Carl Vadivella Belle, 2008 p. 461).

இவ்வாறாக சமய இயக்கங்கள் வளர்ந்து வந்த காலகட்டத்தில் 1930களில் ஒரு தேக்க நிலைக் காணப்படுகின்றது.

இதற்குக் காரணம் அதே காலக்கட்டத்தில் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக இந்திய தேசியவாதம் இந்தியாவில் மட்டும் அல்லாமல் மலாயாவிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இக்காலக்கட்டத்தில் மலாயா இந்துக்கள் தங்களுடைய நாட்டுப் பற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்திய விடுதலைப் பற்றிய சிந்தனைகளே மேலோங்கி இருந்தன. (Ramachandra, 1970, p. 283). இதற்குச் சான்றாக அக்காலக்கட்டத்தில் மலாயாவில் உள்ள இந்திய அமைப்புகள் யாவும் இந்தியாவில் உள்ள அமைப்புகளோடு நட்புறவை வளர்த்திருந்தன.

இத்தகையச் சூழல் 1940களில் முற்றாக மாறியது. இதற்குக் காரணம் 1942லிருந்து 1945 வரை மலாயா ஜப்பானிய காலனித்துவ ஆட்சியில் இருந்தது. இக்காலக்கட்டதில் மக்கள் தங்களுடைய வாழ்வியல் ஆதாரத்தைப் பேணிக்காப்பதில் மட்டுமே கவனம் கொண்டிருந்தனர். மாறாக சமய இயக்கங்களின்பால் மக்கலின் கவனம் செல்லவில்லை. இருப்பினும் ஜப்பானிய காலனித்துவ ஆட்சிக்குப் பிறகு மலாயா இந்தியர்களிடையே மாபெரும் சிந்தனை மாற்றம் ஏற்பட்டது. இந்திய விடுதலைக்கு பிறகு இங்கிருந்த இந்தியர்கள் மலாயாவைத் தங்களின் தாயகமாகக் கருதத் தொடங்கினர். தாங்கள் மலாயாவிற்குப் புலம் பெயர்ந்து வந்தோம் என்ற நிலை மாறி இந்நாடே தன் நாடாக கருதும் சிந்தனை மாற்றம் மாலாயா இந்தியர்களிடையே ஏற்பட்டது. இத்தகைய மாற்றம் 1940களின் இறுதிக்கு பிறகு இந்நாட்டில் பல்வேறு சமய இயக்கங்கள் புத்துணர்ச்சியோடும் புதுத் தெம்போடும் புதிய சிந்தனையோடும் உருவாக வித்திட்டது. (Vineeta Sinha, 2011, p. 217)

1949 இல் இந்து மத இயக்கங்களில் ஒன்றான சுத்த சமாஜம் 'Pure Life Society' எனும் சங்கம் டாக்டர். காசிபிள்ளை செல்லத்தம்பி எனப்படும் சுவாமி சத்தியானந்தா அவர்காளால் பூச்சோங்கில் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் இந்துக்களிடையே சமய ஒற்றுமைக்கும் சமயச் சீர்திருத்த கொள்கைகளுக்கும் வித்திட்டது. இவ்வியக்கம், மலாயா இந்துக்களிடையே பிற சமய இன சகோதரத்துவத்தை வேரூன்றச் செய்வதில் மிகப் பெரிய பங்காற்றியது.

இது போன்றே பினாங்கு இந்து சபா, லிப்பிஸ் இந்து சபா மற்றும் பினாங்கு இராமகிருஷ்ணா ஆசிரமம் முறையே 1949இல் அதிகாரப்பூர்வமாக மலாயாவில் பதிவு செய்யப்பட்டன. சுத்த சமாஜம் Pure Life Society மூலம், சுவாமி சத்யானந்தா பல்வேறு சமய, சமுதாய செயல் நடவடிக்கைகளை மதம், சமயம், சமுதாயம் மற்றும் சாதி பேதமில்லாமல் செயல்படுத்தினார். இந்த இயக்கம் சமுதாயப் பணிகளில் குறிப்பாகக் கல்விக்கும் மனிதநேயத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. இதன் விளைவாக கல்விக்கு தர்மா பள்ளிக்கூடமும் மனித நேயத்திற்கு ஆதரவற்றோரைப் பாதுகாக்கும் இல்லங்களும் உருவாக்கப்பட்டன. அதுமட்டுமில்லாமல் பல்வேறு சமுதாய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பல்வேறு இனத்தவரும் சமயத்தினரும் இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கெடுக்க ஆரம்பித்தார்கள். (Ghana Jegadeva, 2000, ms 21-25).

1940களின் இறுதியின் தொடர்ச்சியாக பல்வேறு புதிய இந்து சமய இயக்கங்கள் 1950களில் உருவாகின. இவை மாநில அளவிலும் வட்டாரங்கள் அளவிலும் இந்து மக்களிடையே சமய சிந்தனையைப் பெருக்குவதற்கும் இந்து சகோதரத்துவத்தைப் பேணிக் காப்பதற்கும் மிகப்பெரிய பங்காற்றின. அவ்வகையில் உருவான இயக்கங்களாக கோலகங்சார் சைவ பரிபாலன சபா, ஈப்போ சனாதன தர்ம சபா, தைப்பிங் சனாதன தர்ம சபா மற்றும் ஜொகூர் பிரம்ம சமாஜம் ஆகியவை 1950 களில் முறையே அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டன. இதனை தொடர்ந்து, 1952இல் பத்து காஜாவில் சைவ பரிபாலன சங்கம் மற்றும் கோலாலம்பூரில் இந்து இளைஞர் இயக்கம் தோற்றம் கண்டன. (Arasaratnam, 1970, p. 165-166).

1950களில் இந்து மக்களிடையே குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சமய சிந்தனை புரட்சியும் சகோதரத்துவமும் அதிகமாகக்

காணப்பட்டது. அதன் தாக்கத்தின் விளைவுதான் இந்து இளைஞர் அமைப்பு. இதற்குச் சான்றாக கோலாலம்பூரில் உள்ள செந்தூல் மெதடிஸ்ட் பாய்ஸ் பள்ளி மாணவர்கள் 12 பேர் ஒன்றிணைந்து இந்து இளைஞர் அமைப்பைத் தொடங்கியது. இதன் உருவாக்கத்திற்கு மாணவர் குழு பொறுப்பேற்றிருந்தாலும், அதற்கு சுவாமி சத்யானந்தா ஆதரவு அளித்து ஊக்கப்படுத்தினார். இதன் முதல் சந்திப்பு கூட்டம் 1949 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் உள்ள செட்டியார் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டதின்பொழுது தற்காலிக செயலவைக் குழு திரு கே.செல்வநாயகம் பொறுப்பில் உருவாக்கப்பட்டு பின்பு அதனுடைய பொதுக்கூட்டம் செந்தூல் கோலாலம்பூரின் உள்ள தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப் பள்ளியில் 17ஆம் திகதி ஆகஸ்டு மாதம் நடைபெற்றது. இவ்வியக்கம் 1954 இல் மலாயா இந்து மாநாடு நடத்தி இந்துக்களிடைய சமய ஒற்றுமையையும் விழிப்புணர்வையும் மேன்மையுறச் செய்தது. பிறகு இவ்வியக்கம் 1958இல் மலாயா இந்து இளைஞர் பேரவையாகப் பதிவு செய்யப்பட்டது. (Rajakrishnan, 1988, ms 131-132; Carlo Calderola, 1982, p.466).

மேலும், 1953 ஆம் ஆண்டில் தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (Divine Life Society) கோலாலம்பூரில் சுவாமி பிரமானந்த சரஸ்வதி எனப்படும் என்.பொன்னையா என்பவரால் உருபவாக்கப்பட்டது. இச்சங்கம் சுவாமி சிவானந்தாவின் போதனைகளையும் வேதாந்தக் கருத்துக்களையும் பரப்பியது. இவ்வியக்கத்தின் முதுகெலும்பாக அக்காலக்கட்டத்தில் இருந்த படித்த இந்திய இளைஞர்களும் இலங்கைத் தமிழர்களும் தங்களுடைய இந்து சமயம் மேன்மையுறப் பணியாற்றினர். தெய்வீக வாழ்க்கைச் சங்கம் Divine Life Society 1953-இல் சுவாமி சிவானந்தாவால் மலாயாவில் கோலாலம்பூரில் தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் 1936 ஆம் ஆண்டில் இந்தியாவின் ரிஷிகேஷில் சுவாமி சிவானந்தாவால் நிறுவப்பட்ட அமைப்பின் ஒரு கிளை ஆகும். அவர்களின் போதனைகள் அனைத்தும் வேதாந்தத்தையும் சுவாமி சிவானந்தா அறிமுகப்படுத்திய தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்த அமைப்பு இந்து மதத்தில் யோகாவின் அம்சத்தை மையமாகக் கொண்டுள்ளது (Rajakrishnan, p.130).

இது போன்றே படித்த இந்தியர்கள் சைவ சமய சிந்தனை மேன்மையுற 1955இல் மலாயா அருள் நெறித் திருக்கூட்டம் கோலாலம்பூரில் பதிவு செய்யப்பட்டது. இதற்கு உறுதுணையாக கே.ராமநாத செட்டியாரும் மற்றும் சுவாமி சத்யானந்தாவும் சுவாமி பிரமானந்தாவும் இருந்தனர். மலாயா அருள்நெறி திருக்கூட்டத்தில் அதிகமாக இலங்கைத் தமிழர்களின் பங்கேற்பு இருந்தது. (Rajakrishnan, 1988, pp.131-132). மலாயா அருள் நெறித் திருக்கூட்டம் (1956) சைவ சித்தாந்தத்தின் உரை போதனைகளையும் கற்பிப்பதில் கவனம் செலுத்தியது. இலங்கைத் தமிழர்கள், செட்டியார் மக்கள் மற்றும் உயர்கல்விக் கற்றத் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் அவர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். அவர்களின் நடவடிக்கைகள் சைவ மதத்தின் போதனையை மட்டும் கொண்டிருந்தன. (Pavala Vizla Malar, 1991, p.168).

எனினும் விடுதலைக்கு முன் தோன்றிய இந்து சமய இயக்கங்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கும் மாநில வட்டார மக்களுக்குமான தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் மட்டுமே செயல்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இவ்வியக்கங்களின் செயல் நடவடிக்கைகள் அதன் உறுப்பினர்களின் தேவையை ஒட்டியே அமைந்திருந்தன. மேலும், அவ்வியக்கங்கள் தங்களுக்கெனன் உள்ள சில நம்பிக்கைகளையும் தத்துவங்களையும் சமய போதனைகளையும் பரப்பும் செயலில் ஈடுபட்டிருந்தன. (Maṇi, 2008).

## முடிவுரை

மலாயாவில் இந்து சமய வளர்ச்சிக்காக உருவான இந்து சமய இயக்கங்கள்,

சமய வளர்ச்சிக்கும் இந்து சமய சகோதரத்துவத்துக்கும் வழிவகுத்துள்ளன. இந்த இயக்கங்கள் மிகப் பெரிய தாக்கத்தைப் படித்த இந்தியர்கள், இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளன. ஆனால் மலாயாவில் வாழ்ந்த தோட்டப்புற இந்துக்களிடையே இவ்வியக்கங்களின் தாக்கம் குறைவாகவே சென்றடைந்தது. இருப்பினும் இவ்வியக்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் மலாயாவின் விடுதலைக்குப் பின் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சிக்கும் இந்து சமய இயக்கங்களின் தோற்றத்திற்கும், முன்னேற்றதிற்கும் பெரும் பங்காற்றியுள்ளன.

## References


Adhyaksha. (2001). *India's Heritage: Vedas to Sri Ramakrishna*. Chennai: Sri Ramakrishna Math.

Alexandra Kent. (2007). *Divinity and diversity : a Hindu revitalization movement in Malaysia.* Singa pore : Institute of Southeast Asian Studies ; Copenhagen : NIAS Press.

Ampalavanar, Rajeswary (1972), Class, Caste, and Ethnicism among Urban Indians in Malaya, 1920-1941, *Nusantara, 2*, 209-36.

Anbalakan K. (2008). Socio-economic Self-help mong Indians in Malaysia.In K Kesavapany; A Mani; P Ramasamy (Eds.), *Rising India and Indian communities in East Asia* (pp. 422-435). Singapore : Institute of Southeast Asian Studies.

Andrew Willford (2008). Ethnic Clashes, Squatters and Historicity in Malaysia. In K Kesavapany; A Mani; P Ramasamy (Eds.), *Rising India and Indian communities in East Asia* (pp. 436-455). Singapore : Institute of Southeast Asian Studies.

Arasaratnam S., (1966). *Indian festivals in Malaya.* Kuala Lumpur : Dept. of Indian Studies, University of Malaya.

Arasaratnam, S. (1970). *Indians in Malaysia and Singapore*. Kuala Lumpur: Oxford University Press.

Arasaratnam, S. (2006). Malaysian Indians: The Formation Of Incipient Society. In Kernial Singh Sandhu & Mani A. (Eds.). *Indian communities in Southeast Asia*, pp.190 – 210. Singapore : ISEAS.

Arumugam K. (2008). Tamil school education in Malaysia: challenges and prospects in the new millennium. In K Kesavapany; A Mani; P Ramasamy (Eds.), *Rising India and Indian communities in East Asia* (pp. 399-421). Singapore: Institute of Southeast Asian Studies.

Bansi Pandit (2005). *Explore Hinduism*. Loughborough : Heart of Albion Press,

Beckerlegge, Gwilym. (2000). *The Ramakrishna Mission: The Making of a Modern Hindu Movement*. Oxford: Oxford University Press.

Belle, Carl Vadivella (2008). Hinduism in Mlaya/Malaysia. In Parvati Raghuram (Ed.) *Tracing an Indian diaspora : contexts, memories,representations*. Los Angeles, Calif.: Sage Publications.

Belle, Carl Vadivella. (2008). Indian Hindu Resurgence in Malaysia. In Kesavapany, K. Mani, A., & Ramasamy, P. (Eds.). *Rising India and Indian communities in East Asia,* pp. 461-481. Singapore : Institute of Southeast Asian Studies.

Bosch, F.D.K. (1961). The problem of the Hindu colonization of Indonesia. In *Selected Studies in Indonesian Archaeology* (pp. 3-22). The Hague: Martinus Nijhoff.

Caldarola, Carlo. (1982). *Religions and societies : Asia and the Middle East*. Berlin ; New York : Mouton.

Chinmaya Mission Trust (2006). *Hinduism : frequently asked questions.*Langhorne, PA : Chinmaya Publications.

Coedes, G. (1968). *The Indianization States of Southeast Asia*. Translated by Susan Brown Cowing. Kuala Lumpur: University of Malaya Press.

Cybelle Shattuck. (1999). *Hinduism.* London: Routledge

Devapoopathy Nadarajah. (1986). *The Strength of Saivism*. Kuala Lumpur: The Selangor and Wilayah Persekutuan Ceylon Saivite Association.

Gana Jegadeva., & S. Sundareson. (Eds.) (2000). *The Pure Life Society : A Spiritual Sanctuary*. Kuala Lumpur : Persatuan Pure Life.

Gavin D Flood. (1996). *An introduction to Hinduism.* Cambridge, England; New York: Cambridge University Press.

Glock, Charles Y. (1976). *The New religious consciousness*. Berkeley: University of California Press.

Ibtisam M. H. Naji & Maya Khemlani David (January 2006) Markers of ethnic identity: focus on the Malaysian Tamil community. *Internationa Journal of the Sociology of Language Volume 2003, Issue 161,* 91–102*,* doi: 10.1515/ijsl.2003.031.

J. C. van Leur, (1955). *Indonesian Trade and Society: Essays in Asian Social and Economic History*, Translated by. James S. Holmes & A. van Marle , The Hague: W. Van Hoeve.

Jain, Ravindra K. (1970). *South Indians on the plantation frontier in Malaya*. Kula Lumpur: University of Malaya Press.

Meredith L. Weiss. (2013). Malaysian NGOs: History, Legal Framework, and Characteristics. In Meredith L. Weiss. & Saliha Hassan (Eds) *Social Movements in Malaysia : From Moral Communities to NGOs*.(pp. 20-36). London: Routledge Curzon.

Nataraajan, S. (1983). *Aalayangkalum Aakamangkalum* . Chennai: Prithipa Publication.

Neuman, William Lawrence. (2003). *Social research methods : qualitative and quantitative approaches*. Boston: Pearson/Allyn and Bacon. Edisi Keenam.

*Pavala Vizla Malar*. (1991). Kuala Lumpur: Malaya Arul Neri Thirukkootam

Rajakrishnan, R. (1988). *Sojourners to citizens : Sri Lankan Tamils in Malaysia, 1885-1965*. Kuala Lumpur: The Author.

Rajakrishnan, R. & Rajantheran, M. (1994). *Pengantar Tamadun India*. Kuala Lumpur: Fajar Bakti Sdn.Bhd.

Rajantheran, M. & Kumaran, S. (2006). *Kamus Bahasa Tamil, Bahasa Melayu, Bahasa Inggeris.* Shah Alam: Fajar Bakti.

Rajantheran, M. & Manimaran, S. (1994). *Perayaan Orang India*. Kuala Lumpur: Fajar Bakti.

Rajantheran, M. & Manimaran, S. (2006). Konsep ketuhanan masyarakat beragama Hindu luar bandar di Malaysia. Singaravelu, S. (Ed.). *Pengajian India : bicara pelbagai perspektif*, 41-74. Kuala Lumpur: University Malaya Press.

Rajantheran, M. & Manimaran, S.(1994). *Adat dan Pantang Larang Orang India*. Kuala Lumpur: Penerbit Fajar Bakti.

Rajantheran, M. & Sivapalan, G. (2004). *Adat Resam Masyarakat India*. Kuala Lumpur: Jabatan Perpaduan Negara dan Intergrasi Nasional & Jabatan Perdana Menteri.

Rajantheran, M. (1996). Perdagangan awal di antara India dan Alam Melayu (Early Commerce between India and the Malay world),. *Journal of Indian Studies, 6*, 75-84.

Rajantheran, M. (1999). *Sejarah Melayu : kesan hubungan kebudayaan Melayu dan India*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Ramachandra, G. P. (1970). *The Indian independence movement in Malaya, 1942-1945.* Dissertation (M.A.) Universiti Malaya.

Ravichandran Moorthy. (2009). The evolution of the Chitty. *Jebat: Malaysian Journal of History, Politics and Strategic Studies, 36*, 1-15. Retrieved January 15, 2013 from http://myais.fsktm.um.edu.my/10237/1/Jebat2009-Ravi.pdf

Sandhu, Kernial Singh. (1983). Indian Settlement in Melaka. In Sandhu, Kernial Singh. & Wheatley, Paul. (Eds.). *Melaka : the transformation of a Malay capital, 1400-1980*, Vol. 2. Kuala Lumpur : Oxford University Press.

Sandhu, Kernial Singh. (2010). *Indians in Malaya : some aspects of their immigration and settlement (1786-1957)*. Cambridge: Cambridge University Press. Edisi kedua.

Sinha (2005). *A new God in the diaspora : Muneeswaran worship in contemporary Singapore*. Singapore: Singapore Univ. Press.

Steven Vertove, (2000).*The Hindu diaspora: comparative patterns.* London: Routledge.

Subramanian.N.(1966). *Sangam Polity: The Administration and Social Life of The Sangam Tamils*. Bombay: Asia Publishing House.

Vineeta Sinha. (2008). *Hindu Temples in Singapore*. Krishna G Rampal (Ed.), In *Sacred structures : artistic renditions of Hindu temples in Malaysia and Singapore* (pp.15-42). Singapore : Bluetoffee.

Vineeta Sinha. (2011). *Religion-State Encounters in Hindu Domains From the Straits Settlements to Singapore.* Dordrecht [Netherlands] ; New York : Springer.